# பத்திரிக்கை செய்தி

## நீர் தேக்க தொட்டி இயக்கும் பணி வழங்க ரூ.25,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய ஊராட்சி மன்ற தலைவி கைது

புகார்தாரர் திருமதி.பராசக்தி, கோவில் தெரு, எடைபிறை கிராமம், போளூர் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் கணவர் கடந்த 15 ஆண்டுகளாக இடப்பிறை ஊராட்சி ஒன்றியத்தில் நீர் தேக்க தொட்டி இயக்கும் பணியை செய்து வந்துள்ளார். கடந்த 31.12.2022ம் தேதி உடல் நலக்குறைவால் காலமானார். இதனைத்தொடர்ந்து நீர் தேக்க தொட்டி ஆப்பரேட்டராக பராசக்தி தொடர்ந்து வேலை செய்து வருகிறார். பராசக்தி அவர்களுக்கு கடந்த 4 மாதங்களாக திருமதி.ஜீவா, ஊராட்சி மன்ற தலைவி அவர்களின் உத்தரவின் பேரில் எவ்வித சம்பளமும் கொடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக பராசக்தி அவர்கள் தன் சகோதரருடன் ஊராட்சி மன்ற தலைவி திருமதி.ஜீவா அவர்களை 21.03.2023 சந்தித்து சம்பளம் கொடுக்காதது பற்றி கூறியுள்ளார். அதற்கு திருமதி.ஜீவா, ஊராட்சி மன்ற தலைவி அவர்கள் புகார்தாரரை டேங்க் ஆப்பரேட்டர் பணி நியமிக்க வேண்டுமெனில் தனக்கு ரூ.5,00,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கூறியுள்ளார். பின்னர் லஞ்ச பணம் ரூ.5,00,000/-லிருந்து ரூ.4,50,000/- குறைத்து கொடுக்க வேண்டும் எனவும், முன்பணமாக ரூ.25,000/- கொடுத்தால் தான் அப்பணியை வேறு நபருக்கு பணி ஆணை வழங்காமல் இருக்க முடியும் என கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருவண்ணாமலை லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 31.03.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.ஜீவா, ஊராட்சி மன்ற தலைவி, லஞ்ச பணம் ரூ.25,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## PANCHAYAT PRESIDENT ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.25,000/- FOR THE POST OF WATER TANK OPERATOR.

The complainant Tmt.Parasakthi, is residing at Kovil Street, Edaipirai Village, Polur Taluk, Tiruvannamalai District. Complainant's husband had been working as a water tank operation for the past 15 years and he had expired on 31.12.2022. Later his wife Tmt.Parasakthi, continued to work as Water tank operator at the same panchayat union. For the past four months the panchayat had not given salary to the complainant. When the complainant along with her brother met Tmt.Jeeva, Panchayat President, Edaipirai Village, Tiruvannamalai Distrcit. Tmt.Jeeva, Panchayat President, had demanded Rs.5,00,000/- as bribe for processing her request and reserving the post for the complainant. Later the Panchayat President reduced the bribe amount from Rs.5,00,000/- to Rs.4,50,000/- and demanded Rs.25,000/- as advance bribe for processing her request. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tiruvannamalai detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 31.03.2023, during the trap proceedings, Tmt.Jeeva, Panchayat President, reiterated her earlier demand and received the advance bribe amount of Rs.25,000/- from the Complainant. The accused was arrested.